மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே குளமாக இருக்கிற இடத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏராளமான குடும்பங்கள்—300 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்கு மாற்று இடங்களைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தக் குடும்பங்கள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அவர் நன்றி சொல்லும்போது அந்த இடம் வெற்றிடமாக இருக்கும் என்று நினைத்தேன். குடும்பங்களையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அது வேறு பிரச்சனையாக இருக்கிறது. ஆக, எல்லாவற்றையும் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனில் உள்ள தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி

425—(*வினா எண் 9647) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனுக்கு உட்பட்ட தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வாய்ப்பு இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள்

1987 ஏப்ரல் 21]

வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் நடத்தாவிட்டாலும் தனியாருக்காவது அந்தப் பேக்டரியைக் கொடுத்து, தொழில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தனியாருக்குக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அரசு நடத்த தயாராக இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவரவர்களே, அந்தத் தொழிற் சாலையைக் கேட்டு தனியார்கள் எத்தனை பேர் விண்ணப்பித் துள்ளார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தனியார் நடத்த முன்வந்தால் தாராளமாகக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால் தனியார் எடுத்து நடத்துவதாகச் சொல்கிறார்களே தவிர இதுவரையில் எந்தத் தனியாரும் விண்ணப்பம் போடவில்லை.

திரு. க. இரா. சின்னராசு: தலைவரவர்களே, இந்த ஸ்டீல் தொழிற்சாலையில் 60, 70 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். நீண்டகாலமாக இந்தத் தொழிற்சாலை மூடப் பட்டிருப்பதால் அவர்கள் எல்லாம் மிகவும் அவதிப்படுகிறார்கள். தொழிலாளர் நலனைக் கருத்திற்கொண்டு மீண்டும் இந்தக் தொழிற்சாலையை அரசே நடத்த பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அந்த நிறுவனத்தை தேசியமயமாக்கத் திட்டமிடப்பட்டது. 71 இலட்சம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டிருக்கிறது. இருந் தாலும் அதைக் காப்பாற்றக்கூடிய நிலைமை இல்லை. தனியார் எடுத்துக்கொள்ள முன்வந்தார் அவர்களுக்குத் தர அரசு தயாராக இருக்கிறது.